| Published Date: | 22 Aug 2017 | Publication: | Dina Bhoomi |
|---|---|---|---|
| Edition: | Puducherry | Page No: | 7 |

# கேந்திர வித்யாலயா எண்.2 புதுவை பள்ளியைச் சேர்ந்த ஜெயகிருஷ்ணன் வேதபுரீஸ்வரர் டிசிஎஸ் ஐடி டபிள்யு ஐஇசட் சென்னைபதிப்பில் வெற்றி

புதுவை,ஆக.22

இந்தியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப சேவைகள், ஆலோசனை மற்றும் வர்த்தகத் தீர்வுகள் நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நடத்தும் இந்தியாவின் மிகப்பெரிய பள்ளிகளுக்கு இடையிலான புதிர் போட்டியான வுஊளு ஐவுறுணை – ன் சென்னை பதிப்பு,1250 – க்கும் மேற்பட்ட மாணவர்களின் பங்கேற்புடன், ஆகஸ்ட் 17 அன்று மியூசிக் அகாடமியில் நடைபெற்றது. 620 – க்கும் மேற்பட்ட அணிகளை வீழ்த்தி, கேந்திரய வித்யாலயா எண்.2, புதுச்சேரி பள்ளியைச் சேர்ந்த து.ஜெயகிருஷ்ணன் மற்றும் யு.வேதபுரீஸ்வர் ஆகியோர் இதில் பிராந்திய வெற்றியாளர்களாக வெற்றிபெற்றனர். அவர்கள், இந்தியாவின் பிற 11 பிராந்திய அணிகளுடன், தேசிய அளவிலான இறுதிப்போட்டியில் போட்டியிடவுள்ளனர் 5 சுற்றுகளாக நடந்த பிராந்திய இறுதிப்போட்டியில்,பாண்டிச்சேரியில் உள்ளகேந்திர வித்யாலயா எண்.2 பள்ளியைச் சேர்ந்தது. ஜெயகிருஷ்ணன் வேதபுரீஸ்வர் "பிராந்திய வெற்றியாளர்கள்"என தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் அவர்களுக்கு ரூ.60,000 மதிப்பிலான கிப்ட் வவுச்சர்கள் வழங்கப்பட்டன. இரண்டாம் இடம் பிடித்த சென்னை, செட்டிநாடு வித்யாஸ்ரம் பள்ளியைச் சேர்ந்த ஆதித்யா. மற்றும் ஹர்ஷ் யாதவ் ஆகியோருக்குக்கு ரூ.40,000 மதிப்பிலான கிப்ட் வவுச்சர்கள் பரிசாக வழங்கப்பட்டன. தேசிய இறுதிப்போட்டிகளுக்கு மும்பைக்கு விமானத்தில் செல்லும் வாய்ப்பு வழங்கப்படும்.பரிசுகளை தலைமை விருந்தினர்,சென்னை, கான்சுலேட் ஜெனரல் ஆப் ஜெர்மனி, அசிம் பபிக் அவர்கள்,சென்னை,வுஊளுஇ செயல்பாடுகள் பிரிவின் தலைவர் சுரேஸ் ராமனுடன் இணைந்து வழங்கினர்.இப்புதிர்போட்டியை பிரபல குவிஸ் மாஸ்டர் கிரி 'பிக்பிரெய்ன்'பாலசுப்ரமணியம் நடத்தினார்.